## முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்

**18.11.2025.**

OS. No.233/2011

பக்கம் – 2

DW1 – தேவகி

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதியை எனது கணவர் மூலமாக எனக்கு தெரியும் . கிருஷ்ணகிரியில் சுமார் 40 ஆண்டு காலம் வசித்து வருகிறேன் . என்னுடைய கணவரும் அங்கு தான் வசித்து வருகிறார் . என்னுடைய உறவினர்களை பார்ப்பதற்காக வேண்டி நான் கண்ணன்தாங்கல் கிராமத்திற்கு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திய தேதி அன்று வந்திருந்தேன் . வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் கோயம்பேட்டில் வைத்து கையெழுத்து செய்தேன். என்னுடைய மகளின் திருமணத்திற்காக வேண்டி கடன் தொகை பெற நான் கோயம்பேட்டிற்கு சென்றேன் . எனது மகளின் திருமணம் எப்பொழுது நடைபெற்றது என்ற விவரம் தற்போது எனக்கு சரியாக ஞாபகமில்லை. 13.08.2008 அன்று நான் ரூபாய் ஒரு லட்சம் பெற்றேன். அதன்பிறகு வாதியே என்னை அழைத்து ரூபாய் ஐம்பதாயிரம் கொடுத்தார். அந்த சமயம் நான் கிருஷ்ணகிரியில் தான் இருந்தேன். ரூபாய் ஐம்பதாயிரம் பெற்ற பிறகு நான் வாதியை எப்பொழுதும் பார்த்ததில்லை . வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் கிரைய தொகை எவ்வளவு எழுத்தப்பட்டிருந்தது என்றால் அதில் பணம் எதுவும் நிரப்பப்படவில்லை . படித்துப்பார்த்து தான் கையெழுத்து செய்தேன் . என்னுடைய கணவரும் அதில் கையெழுத்து செய்திருந்தார் . வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரம் ஏற்படுத்துவதற்கு முன்னர் வாதியை நான் எத்தனை முறை பார்த்துள்ளேன் என்றால் அது குறித்து எனக்கு தற்போது ஞாபகமில்லை . தாவா சொத்தின் அசல் ஆவணங்களை வாதியிடம் நான் கொடுக்கவில்லை. கண்ணங்தாங்கல் கிராமத்திற்கு நான் தாவா

சொத்தினை என்னுடைய மகளின் திருமண செலவிற்காக வேண்டி விற்பனை செய்ய வேண்டி தான் கிருஷ்ணகிரியிலிருந்து வந்தேன் என்றும் எந்தவொரு உறவினர்களை பார்ப்பதற்காகவும் கடன் வாங்க வேண்டியும் வரவில்லை என்றால் சரியில்லை . என்னுடைய முதல் விசாரணையில் நான் வாதியிடமிருந்து பெற்ற கடன் தொகையை நான் திரும்ப செலுத்திவிட்டதாக சொல்லி உள்ளேன் என்றால சரிதான் . நான் ஒன்றரை லட்சம் பணத்தை பெற்ற பின்பு வாதியை பார்க்கவில்லை என்று சொல்லியதன் அடிப்படையில் அவரிடன் நான் பெற்றதாக சொல்லப்படும் கடன் தொகையை திரும்ப செலுத்தியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. கிருஷ்ணகிரியில் நான் வசித்து வரும் வீடு சொந்த வீடு தான் . வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் ஏற்படுத்திக் கொடுத்த போது கிருஷ்ணகிரியில் எந்த விலாசத்தில் வசித்து வந்தேன் என்று தற்போது ஞாபமில்லை. அந்த சமயம் நான் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான் . வாதியிடம் குடும்ப அட்டையில் உள்ள விலாசத்தை தான் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான் . நான் வீட்டின் விலாசத்தை மற்றியது தொடர்பாக வாதியிடம் தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை . கணணந்தாங்கல் கிராத்தில் எனக்கு 73 செண்ட் இடம் உள்ளது. அந்த 73 சென்ட் இடத்தை சென்று ரூபாய் 5500 வீதம் மொத்தமாக ரூபாய் 4 லட்சத்து 1500 ரூபாய் கிரைய தொகையாக நிர்ணயம் செய்து வா .சா.ஆ.1 திரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால் சரியல்ல . அதற்காக வேண்டி தான் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்பட்ட அன்று ரூபாய் ஒரு லட்சம் பணத்தையும் 01.12.2008 அன்று ரூபாய் 50,000 பணத்தையும் நான் பெற்றேன் என்றால் இல்லை . கடனாக தான் பெற்றேன் . 01.12.2008 க்கு பின்னர் நான் வீட்டை மாற்றிய காரணத்தினால் தான் வாதியால் பாக்கி கிரைய தொகையை என்னிடம் கொடுத்து கிரயத்தை

முடிக்க முடியவில்லை என்றால் சரியல்ல . 2023 ஆம் ஆண்டு தான் நவம்பர் மாதம் இந்த வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியவந்தது. அந்த வருடம் நான் தாவா சொத்திற்கு சென்ற போது தான் இது போன்ற வழக்கு நிலுவையில் இருந்த விபரம் எனக்கு தெரியவந்தது . யார் சொன்னார்கள் என்ற விபரம் என்னால் தற்போது குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. ரவா சொத்தை நான் கிரையம் செய்து கொடுப்பதற்காக வேண்டி தான் பிறையை முன் தொகையை பெற்று வா .சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி கொடுத்தேன் என்றும் கடனாக வாதியிடம் இருந்து எந்த தொகையும் பெற்று அவருக்கு திருப்பி செலுத்தவில்லை என்றால் சரியல்ல . என்னுடைய மகளின் திருமணத்திற்காக வேண்டி திருமணத்திற்காக வேண்டி தாவாசொத்தை கிரையன் செய்து கொடுக்க சம்மதித்துவிட்டு பிறகு முன்வைப்புத் தொகையை பெற்றுக்கொண்டு திருமணத்தை முடித்த பின்னர் நான் கிரயம் செய்து கொடுக்க மறுத்து வருகின்றேன் என்றால் சரியல்ல . இந்த வழக்கு நிலுவையில் இருந்து வந்த விபரத்தை தெரிந்து கொண்டு தான் நான் தாவா சொத்தை என்னுடைய மகனின் பெயருக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரியில்லை. எனது மகன் தான் என்னை பராமரித்து வருகின்ற காரணத்தினால் அவனுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று தான் செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தேன் . அதனால் வாதி பாக்கி தொகையை செலுத்த தயாராக உள்ள காரணத்தினால் தாவா படி தீர்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்